


# கருணைக்கு ஓய்வே இல்லாத இடம்

## பெசன்ட் நினைவு விலங்கு மருத்துவமனை (BMAD)

சுபாஷிணி கோமேஸ்வரன்




இந்த வாயில்கள் வழியாகக் கடந்து சென்ற ஆயிரக்கணக்கான உயிர்களைப் பறைசாற்றும் பிரம்மாண்டமான அறிவிப்புப் பலகை எதுவும் இல்லை. கைவிடப்பட்ட நாய்க்குட்டிகள் குடும்பங்களைக் கண்டடைந்ததையோ, விபத்தில் சிக்கி மீண்டும் நடக்கக் கற்றுக்கொண்ட விலங்குகளையோ, புறக்கணிக்கப்பட்டு மீண்ட குதிரைகளையோ, அல்லது காட்டுக்குத் திரும்பிய கலைமான்களையோ கௌரவிக்கும் நினைவுச்சின்னம் எதுவும் இல்லை. பயந்துபோய், காயங்களுடன் வந்து, பின்னர் ஆரோக்கியமாகவும் முழுமையாகவும் திரும்பிச் சென்ற எண்ணற்ற சமூக நாய்களைக் கொண்டாடும் நினைவுப் பலகைகள் எதுவும் இல்லை.

ஒவ்வொரு காலையிலும் மீண்டும் தொடங்குவதற்குத் தயாராகத் வரும் ஒரு குழு மட்டுமே இங்கு உள்ளது.

இன்று, பெசன்ட் நினைவு விலங்குகள் மருத்துவமனை (BMAD) சென்னையின் மிகப்பெரிய விலங்குகள் நல மருத்துவமனைகளில் ஒன்றாக வளர்ந்துள்ளது; இது ஒவ்வொரு மாதமும் சுமார் 2,300 விலங்குகளுக்குச் சிகிச்சை அளிக்கிறது. ஒரு காலத்தில் இரண்டு கால்நடை மருத்துவர்கள் மற்றும் ஒரு பராமரிப்பாளருடன் ஒரு சாதாரண தங்குமிடமாக மட்டுமே இருந்த வளாகத்தில், இப்போது 11 கால்நடை மருத்துவர்கள், 6 மேலாளர்கள், 30 பராமரிப்பாளர்கள், 3 அறுவை சிகிச்சை அறைகள், மேம்பட்ட ஆய்வகங்கள் மற்றும் ஒரு பிரத்யேக வனவிலங்கு சிகிச்சை மற்றும் இடமாற்ற மையம் ஆகியவை உள்ளன.

இதன் பயணத்தின் கதை வசதியைப் பொருட்படுத்தாமல், கருணையைத் தேர்ந்தெடுத்து, ஒரு கனவு நனவாவதைக் காணும் வரை அங்கேயே நிலைத்திருந்த திடமான மனிதர்களின் கதை ஆகும்.

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, நீரஜா ஒரு தன்னார்வலராக BMAD-க்கு வந்தார். "நான் இங்கே இருப்பேன் என்று ஒருபோதும் நினைத்ததில்லை," என்று அவர் புன்னகைக்கிறார். "இது முற்றிலும் எதிர்பாராமல் நிகழ்ந்த ஒன்று. நான் இங்கேயே தங்கிவிட்டேன்." முன்பு, இந்த விலங்கு காப்பகம் மிகக் குறைந்த வளங்களைக் கொண்டே இயங்கி வந்தது. கைவிடப்பட்ட மற்றும் காயமடைந்த விலங்குகளுக்குப் புகலிடம் அளிப்பதும், கிடைத்த வளங்களைக் கொண்டு முடிந்தவரை சிறந்த சேவையை வழங்குவதுமே இதன் முக்கிய நோக்கமாக இருந்தது.

பின்னர் பெருந்தொற்று காலம் வந்தது. நகரின் பெரும்பாலான செயல்பாடுகள் முடங்கியிருந்த நிலையிலும், BMAD தொடர்ந்து இயங்கியது; இரண்டு பரிசோதனை மேஜைகள் மட்டுமே கொண்டு, தினமும் சில மணிநேரங்கள் வெளிநோயாளிகளுக்கு சிகிச்சைக்கான இடமாக இருந்தன. சாத்தியமான இடங்களில் எல்லாம் கருத்தடைத் திட்டங்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. குணமடைந்த ஒவ்வொரு விலங்கும் ஒரு முக்கியமான பாடத்தை உறுதிப்படுத்தியது: சீரான முயற்சியுடன் இயங்கும் சிறிய அமைப்புகள் கூட, ஒரு மகத்தான மாற்றத்திற்கான அடித்தளமாக அமையக்கூடும் என்பதே ஆகும்.

ஆண்டுகள் செல்லச் செல்ல, நிலையான செயல்பாட்டு நடைமுறைகள் அறிமுகப்படுத்தப்பட்டன, மருத்துவக் குழு விரிவடைந்தது, சமூக ஊடகங்கள் எதிர்பாராதவிதமாக அந்த அமைப்பின் மிகப்பெரிய கூட்டாளிகளில் ஒன்றாக மாறின. மீட்கப்பட்ட விலங்குகள் மக்களின் வீடுகளுக்குச் சென்றடைந்தது, தன்னார்வலர்கள், நன்கொடையாளர்கள் மற்றும் சாதாரண குடிமக்களை வளர்ந்து வரும் மருத்துவமனையின் ஒரு பகுதியாக மாற ஊக்குவித்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு, BMAD தனது வெளிநோயாளர் பிரிவை (OP) முறையாகத் திறந்தது. நீரஜா விளக்குகிறார், "மக்களுக்கு அரசு மருத்துவமனைகள் அல்லது விலையுயர்ந்த தனியார் மருத்துவமனைகள் என்று இரண்டு பிரிவு இருந்தது. எதைத் தேர்வு செய்வது என்பதை முடிவு செய்யும் இடைவெளி சிறியதே. அந்த இடைவெளி விரைவில் இன்றியமையாததாக மாறியது".

இன்று, இந்த மருத்துவமனை ஒவ்வொரு மாதமும் கிட்டத்தட்ட 300 கருத்தடை அறுவை சிகிச்சைகளையும், 50-க்கும் மேற்பட்ட பெரிய அறுவை சிகிச்சைகளையும் செய்கிறது. பெரும்பாலான சிகிச்சைகளுக்கு அதிக மானியம் வழங்கப்படுகிறது - மேலும் பணம் செலுத்த முடியாதவர்களுக்கு பெரும்பாலும் முற்றிலும் இலவசமாகவே அளிக்கப்படுகிறது. எந்த விலங்கும் திருப்பி அனுப்பப்படுவதில்லை.

"ஒருவரால் சிகிச்சைக்கான செலவை ஏற்க முடியாவிட்டால், என்றாவது ஒருநாள் அவர்கள் பெற்ற உதவியை மற்றவர்களுக்கும் செய்ய வேண்டும் என்று நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்" என்கிறார் நீரஜா. இதே தத்துவம்தான் அதன் தத்தெடுப்புத் திட்டத்திற்கும் வழிகாட்டுகிறது. "ஒரு விலங்கைக் காப்பாற்றுவது மட்டுமல்ல எங்கள் நோக்கம், அது ஒரு நிரந்தரமான, அன்பான இல்லத்தைக் கண்டடைவதை உறுதி செய்வதே ஆகும்."

டாக்டர் ஜோசிகாவைப் பொறுத்தவரை, மருத்துவமனையின் இந்த வளர்ச்சி ஒரு தனித்துவமான கண்ணோட்டத்தில் இருந்து வெளிப்பட்டுள்ளது. கால்நடை மருத்துவம்,குறிப்பாக 'விலங்கு நலன்' தான் தனக்குரிய இடம் என்பதில் உறுதியாக இருந்த அவர், ஏறக்குறைய ஒரு தசாப்தத்திற்கு முன்பு, ஒரு தன்னார்வலராகவே முதன்முதலில் BMAD-க்கு வந்தார்.

இந்தப் பயணத்திற்கு மனவுறுதி தேவைப்பட்டது. கால்நடை அறிவியல், கடினமான மருத்துவப் பயிற்சியை விலங்கு வளர்ப்புடன் இணைத்தது, அதே நேரத்தில் நடைமுறை அனுபவத்திற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன. பெண் கால்நடை மருத்துவர்கள், முடிவெடுப்பவர்களாக அங்கீகரிக்கப்படுவதற்கு பெரும்பாலும் கடினமாக உழைக்க வேண்டியிருந்தது என்று அவர் நினைவு கூர்கிறார். அந்தச் சூழல் இப்போது நன்றாகவே மாறிவிட்டது. BMAD-ல் ஒரு இளநிலை கால்நடை மருத்துவராகச் சேர்ந்த பிறகு, அவர் படிப்படியாகப் பொறுப்புகளை ஏற்று, ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு தலைமை கால்நடை மருத்துவரானார். அவரது பதவி உயர்வு, நிறுவனத்தின் வலிமையையும் பிரதிபலித்தது. இன்று, அவர் மருத்துவமனையின் மருத்துவ சேவைகளின் ஒவ்வொரு அம்சத்தையும் மேற்பார்வையிடுகிறார்.

எந்தவொரு நாளிலும், 80 முதல் 120 வரையிலான வெளிநோயாளிகள் மருத்துவமனைக்கு வருகிறார்கள். சுமார் நாற்பது விலங்குகள் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கும் நிலையில், மருத்துவக் குழுக்கள் தினமும் 14 முதல் 18 வரையிலான கருத்தடை நடைமுறைகளையும், பல சிக்கலான அறுவை சிகிச்சைகளையும் மேற்கொள்கின்றன. வளாகத்தின் மற்றொரு பகுதியில் வீட்டு விலங்குகள் உள்ளன, அதே நேரத்தில் வனவிலங்கு சிகிச்சை மற்றும் இடமாற்ற மையம் ஒவ்வொரு மாதமும் மீட்கப்பட்ட டஜன் கணக்கான காட்டு விலங்குகளைப் பராமரிக்கிறது.

மருத்துவ உள்கட்டமைப்பின் அதிநவீனத் தன்மையைக் கண்டு பார்வையாளர்கள் மிகவும் ஆச்சரியப்படுகிறார்கள். டிஜிட்டல் ரேடியோகிராபி, அல்ட்ராசோனோகிராபி, ஹெமட்டாலஜி மற்றும் பையோகெமிஸ்ட்ரி ஆய்வகங்கள் இப்போது சிகிச்சைக்குத் துணைபுரிகின்றன, மேலும் கூட்டமைப்புகள் தேவைப்படும்

போதெல்லாம் மேம்பட்ட நோயறிதல் வசதிகள் கிடைக்க அனுமதி வழங்குகின்றன.

ஆனால் டாக்டர் ஜோசிகாவைப் பொறுத்தவரை, உள்கட்டமைப்பு என்பது இந்த மருத்துவமனையின் ஒரு பகுதியை மட்டுமே சொல்கிறது. "எங்கள் கனவு ஒரு சிறந்த மருத்துவமனையைக் கட்டுவது மட்டுமல்ல. மற்ற அமைப்புகளும் கால்நடை மருத்துவ சேவையை மேம்படுத்த உதவுவதன் மூலம், எல்லா இடங்களிலும் விலங்குகளின் நலனை வலுப்படுத்துவதே எங்கள் கனவு" என்கிறார் அவர். இருப்பினும், ஒவ்வொரு வெற்றிகரமான அறுவை சிகிச்சைக்குப் பின்னாலும் மற்றொரு உண்மை உள்ளது. கால்நடை மருத்துவர்களிடையே ஏற்படும் சோர்வு, மன அழுத்தம் மற்றும் அதிக தற்கொலை விகிதங்கள் ஆகியவை உலகளவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன.

"இந்தத் தொழிலில், எங்கே ஆழ்ந்த அக்கறை காட்ட வேண்டும் என்பதையும், நாளை மீண்டும் திரும்புவதற்காக எங்கே போதுமான அளவு விலகி இருக்க வேண்டும் என்பதையும் நீங்கள் கற்றுக்கொள்கிறீர்கள்." என்று அமைதியாகச் சொல்கிறார்.

பிஎம்ஏடி (BMAD) சென்னையின் பரபரப்பான விலங்கு மருத்துவமனைகளில் ஒன்றாக மாறுவதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே, ஸ்ரவன் கிருஷ்ணன் முற்றிலும் மாறுபட்ட எதிர்காலத்தைக் கற்பனை செய்திருந்தார். ஒரு இளைஞனாக, கிரிக்கெட் அவரது உலகத்தை ஆக்கிரமித்திருந்தது. ஒரு விபத்து அவரைத் தனது பாதையை மறுபரிசீலனை செய்யக் கட்டாயப்படுத்தும் வரை, அவர் தமிழ்நாட்டிற்காக விளையாடினார். மீட்கப்பட்ட மற்றும் தத்தெடுக்கப்பட்ட விலங்குகளுக்கு மத்தியில் வளர்ந்தது, அவரின் மனதில் ஒரு விதையை விதைத்திருந்தது. 2011-ல், அவர் நாய்களுக்கான தங்குமிட வசதியைத் தொடங்கினார். அதனுடன், ஒரு சிறிய மீட்பு மையத்தையும் நிறுவினார்; மற்றும் வனவிலங்கு மீட்புகளின் போது வனத்துறையுடன் விரிவாகத் தன்னார்வப் பணியாற்றினார். 2017-ல் எல்லாம் மாறியது.

ஒரு பெரிய விலங்கு நல அகத்தை உருவாக்கும் எண்ணத்துடன் தியோசாஃபிகல் சொசைட்டியை அணுகிய பிறகு, அப்போதைய தலைவர் டிம் பாய்ட், அந்தச் சங்கத்தின் நீண்டகாலமாக இருக்கும் விலங்குகளுக்கான மருந்தகத்தைச் சீரமைத்து, நிர்வகிக்கும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். அதைத் தொடர்ந்து ஒரு மக்கள் நிதி திரட்டும் பிரச்சாரம் நடத்தப்பட்டது. பொதுமக்களின் ஆதரவு அனைத்து எதிர்பார்ப்புகளையும் விஞ்சியது.

அடுத்த சில ஆண்டுகளில் உருவானது, விரிவாக்கப்பட்ட ஒரு தங்குமிடத்தை விட மிகப் பெரியதாக இருந்தது. அது ஆண்டுதோறும் கிட்டத்தட்ட ஒரு லட்சம் விலங்குகளுக்குச் சேவை செய்யும் ஒரு ஒருங்கிணைந்த விலங்கு நல மருத்துவமனையாக மாறியது. நோயாளிகள் சென்னையிலிருந்து மட்டுமல்லாமல், அண்டை மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களிலிருந்தும் இங்கு வந்தனர்.

இன்று, பிஎம்ஏடி (BMAD) ஒரு கூட்டுச் சூழலமைப்பாகச் செயல்படுகிறது. இங்கு தன்னார்வலர்கள் காயமடைந்த விலங்குகளைக் கொண்டு செல்கின்றனர், அக்கம்பக்கத்தினர் சமூக நாய்களைக் கண்காணிக்கின்றனர், நன்கொடையாளர்கள் சிகிச்சைக்கு மானியம் வழங்குகின்றனர், மேலும் மீட்பாளர்கள் கால்நடை மருத்துவர்களுடன் இணைந்து உயிர்களைக் காப்பாற்றுகின்றனர். இதன் பணிகள் பூனைகள் மற்றும் நாய்களுக்கு மட்டுமில்லாமல், கைவிடப்பட்ட குதிரைகள், மாடுகள் மற்றும் பிற பெரிய வீட்டு விலங்குகள் இங்கு சிகிச்சை மற்றும் மறுவாழ்வு பெறுகின்றன. பெருந்தொற்று காலத்தில், புறக்கணிக்கப்பட்ட கடற்கரைக் குதிரைகள் இந்த வளாகத்திற்குள் தற்காலிகத் தஞ்சம் அடைந்தன.

வனத்துறையுடன் இணைந்து செயல்படும் வனவிலங்கு சிகிச்சை மற்றும் இடமாற்று மையம், லோரிஸ்கள், எறும்புத்தின்னிகள், முள்ளம்பன்றிகள் மற்றும் கலைமான்கள் ஆகிய உயிரினங்களுக்கு, அவசர சிகிச்சையை வழங்கி மறுவாழ்வு அளிக்கிறது. தனித்தனி சிகிச்சை வசதிகள், வனவிலங்குகளும் வீட்டு விலங்குகளும் தொற்றிலிருந்து பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கின்றன.

அதே நேரத்தில், நகர்ப்புற விலங்கு நலனுக்கான மிகவும் பயனுள்ள நீண்டகால தீர்வுகளில் ஒன்றான அறிவியல் பூர்வமான கருத்தடை முறையை BMAD தொடர்ந்து செய்து வருகிறது. இந்த மருத்துவமனை இப்போது ஒவ்வொரு ஆண்டும் சுமார் 5,000 விலங்கு பிறப்புக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைகளைச் செய்கிறது.

இந்தத் திட்டங்கள் அனைத்து சுற்றுப்புறங்களையும் மாற்றியமைத்துள்ளன என்று ஷ்ரவன் நம்புகிறார். "தியோசாஃபிகல் சொசைட்டியைச் சுற்றியுள்ள பகுதிகளில், தொடர்ச்சியான கருத்தடை மூலம் தெரு நாய்களின் எண்ணிக்கை வியத்தகு முறையில் குறைந்துள்ளது," என்று அவர் கூறுகிறார். "ஆரோக்கியமான ஒரு விலங்குக்கு அடைக்கலம் ஒரு இடம் மட்டும் அல்ல; கருத்தடை, தடுப்பூசி மற்றும் பொறுப்பான சமூகப் பராமரிப்பு ஆகியவையே சரியான தீர்வு" என்று அவர் கூறுகிறார்.

BMAD-இல் உள்ளவர்களிடம் எதை நினைத்து அவர்கள் மிகவும் பெருமைப்படுகிறார்கள் என்று கேட்டால், ஆச்சரியப்படும் விதமாக, மிகச் சிலரே புள்ளிவிவரங்களைப் பற்றிப் பேசுகிறார்கள். உதவி தேவைப்படும் எந்தவொரு விலங்கையும் ஒருபோதும் திருப்பி அனுப்பாததைப் பற்றி நீரஜா பேசுகிறார். மற்ற நலவாழ்வு அமைப்புகள் பின்பற்றக்கூடிய செயல்முறைகளை உருவாக்கியதைப் பற்றி டாக்டர் ஜோசிகா பேசுகிறார். 1970-களில் ருக்மணி தேவி அருண்டேல் அவர்களின் தலைமையில் தொடங்கப்பட்ட விலங்கு மருத்துவ மையத்தின் மூலம் உருவான கருணைமிக்க பாரம்பரியத்தைக் கொண்ட தியோசோபிகல் சொசைட்டிக்கும், இன்றுள்ள அமைப்பை உருவாக்க உதவிய ஒவ்வொரு தன்னார்வலர், நன்கொடையாளர் மற்றும் மீட்பாளருக்கும் நன்றி தெரிவிப்பதையே ஷ்ரவன் முதலில் குறிப்பிடுகிறார்.

பல ஆண்டுகளாக, கிடைக்கக்கூடிய அனைத்து வளங்களும் விலங்குகளின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கே பயன்படுத்தப்பட்டன. மிகச் சமீபத்தில்தான் இந்த அமைப்பு தனது ஊழியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் நலனிலும் கவனம் செலுத்தத் தொடங்கியுள்ளது; இதற்காக உணவு அருந்தும் இடங்கள், காத்திருப்பு அறைகள் மற்றும் நாள்தோறும் வேதனையைக் கண்டு எதிர்கொள்பவர்களின் மனச்சுமையைப் புரிந்துகொண்டு அதற்கேற்ற சூழலை உருவாக்கும் இடங்கள் போன்றவை அமைக்கப்படுகின்றன.

வெற்றிகரமான ஒவ்வொரு அறுவை சிகிச்சைக்குப் பின்னாலும், தங்கள் பணி நேரம் முடிந்த பிறகும் அங்கேயே தங்கிப் பணியாற்றிய ஒருவர் இருக்கிறார். ஒவ்வொரு தத்தெடுப்புக்கு (adoption) பின்னாலும், முயற்சியைக் கைவிட மறுத்த ஒருவர் இருக்கிறார். காட்டுக்குத் திரும்பிய ஒவ்வொரு விலங்கு, கைவிடப்படாமல் குணப்படுத்தப்பட்ட ஒவ்வொரு தெரு நாய், மற்றும் இரண்டாவது வாய்ப்பைப் பெற்ற ஒவ்வொரு பயந்த உயிரினம் - இவை அனைத்தின் பின்னாலும், வசதியை விடக்கருணையையே அமைதியாகத் தேர்ந்தெடுத்த ஒரு குழு இருக்கிறது.

இதுதான் பெசன்ட் மெமோரியல் அனிமல் டிஸ்பென்சரி (BMAD) அமைப்பைச் சென்னையின் உண்மையான 'சாம்பியன்களில்' ஒருவராக மாற்றுகிறது. ஏனெனில், எந்தவித ஆரவாரமோ அல்லது வெகுமதி எதிர்பார்ப்போ இன்றி, நாளுக்கு நாள் அவர்கள் ஒரு எளிய, அதே சமயம் அசாதாரணமான முடிவை எடுக்கிறார்கள்: அந்த முடிவு, குரலற்ற விலங்குகளுக்குத் தங்களின் உதவி மிகவும் தேவைப்படும்போது அவற்றின் பக்கம் உறுதியாக நிற்பது. லாபம் அல்லது அங்கீகாரத்தைக் கொண்டு வெற்றியை அளவிடும் உலகில், இவர்கள் குணப்படுத்தப்பட்ட உயிர்கள், தணிக்கப்பட்ட வேதனை மற்றும் மீட்டெடுக்கப்பட்ட நம்பிக்கை ஆகியவற்றைக் கொண்டே வெற்றியை அளவிடத் தேர்ந்தெடுத்துள்ளனர். அந்த அமைதியான, அசைக்க முடியாத அர்ப்பணிப்புக்காக, அவர்கள் உண்மையிலேயே சென்னையின் சாம்பியன்களாகத் திகழ்கிறார்கள்.

